★ விலை ரூபா 1-00

**தவறிவிட்டது**
ரூபா 2,87,000/- (6-05-83ல்)
இலங்கை வங்கி பிரதான கிளையில் ரூ 2,87,000/- பெறுமதியான காசோலையும், பணமும் ஒரு மண்ணிறமுடைய தோல்பையுடன் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தகவல் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
ராஜன்,
வின்சர் தியேட்டர்,
கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
(7147)

# ஈழநாடு
THE EELANADU

**விசேட O/L ஆங்கில மொழி வகுப்பு**
**ஆரம்ப நிலையிலிருந்து துரித போதனை**
ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்
இன்று பி. ப. 5மணிக்கு ஆரம்பம்
ச. நல்லநாதன்
மரகதம் பில்டிங்ஸ்
(முதல் மாடி)
233/1/1 (111 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(7135)

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)
மலர் 25 சித்திரை 24 றஜப் 23 இதழ் 85
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7—5—83

# வடக்கில் கொலையுண்ட 3 ஐ.தே.க. ஆதரவாளர், காயமடைந்தவர் குடும்பங்களுக்கு தலா ரூ. 1 லட்சம் நஷ்ட ஈடு!

(ஏ. வி மாணிக்கம்)

வடக்கில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான மூன்று ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளரின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவரின் குடும்பத்துக்கும் நஷ்டஈடுவழங்கப்படும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா ஒரு லட்சம் ரூபாவை அரசு வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்தக்குடும்பங்களுக்கு மேலும் எந்தவிதமான உதவிகளை வழங்கலாமென்று ஆராயும்படி யாழ். மாவட்ட அமைச்சர் பணிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்குநேற்றுக் காலை விஜயம் செய்த கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா இத்தகவலை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்குத் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ்பெரேரா தலைமையில் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு.பி விஜயக்கோன், உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் திரு. பேர்சிசமரவீர ஐக்கியதேசியக்கட்சி பொதுச் செயலாளர் திரு ஹர்ஷ அபயவர்த்தன ஆகியோர் நேற்றுக் காலை விசேஷ விமானத்தில் பலாலி விமானநிலையம் வந்து சேர்ந்தனர்.

பொலிஸ் அதிபர் திரு. ரி. இ. ஆனந்தராஜா வடபிராந்திய பிரதிபொலிஸ்மா அதிபர் திரு. டி. பி. ராஜகுரு, வடபகுதி இராணுவ பொறுப்பதிகாரி பிரிகேடியர் பல்தசார் ஆகியோர் அமைச்சர் தலைமையில் வந்த குழுவினரை, துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானவர்களின் வீடுகளுக்கு அழைத்துச்சென்றனர்.

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியின் பட்டியலில் முதலாவது வேட்பாளரான திரு. கே. வி. இரத்தினசிங்கம், சாவகச்சேரி நகரசபைத்தேர்தலில் ஐ. தே. க. வின் முதலாவது வேட்பாளரான திரு. சா. சி முத்தையா வல்வெட்டித்துறை ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர் திரு எஸ், எஸ் இராஜரத்தினம் ஆகியோர் கடந்தமாதம் 29ம் திகதி பகல் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கியால்

[8-ம் பக்கம் பார்க்க]

## ★ கூட்டணிபட்டியலை நீக்கக்கோரி மனு: பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ்

### 11ம் திகதி விசாரணை

(இ. கந்தசாமி)

யாழ்ப்பாணம் மாநகரசபை வல்வெட்டித்துறை நகரசபை தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி தாக்கல் செய்த நியமன பத்திரங்களை நிராகரிக்க வேண்டும் என்று கோரி தமிழ் காங்கிரஸ் தாக்கல் செய்த றிட் மனு நேற்றுக்காலை அப்பீல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதிகளால் பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது.

இம்மனு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் எச். எச். டி. அல்விஸ், சிவா செல்லையா ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுவில் தேர்தல் ஆணையாளர் திரு ஆர் கே சந்திரானந்த டி சில்வா, யாழ். உதவி தேர்தல் ஆணையாளர் திரு ஏ. ஜெயரட்ணம் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா கூட்டணி பொதுச் செயலாளர் திரு ஏ அமிர்தலிங்கம் ஐ. தே. க. பொதுச் செயலாளர் திரு. ஹர்ஷா

8-ம் பக்கம் பார்க்க)

**சாவகச்சேரி, திருமலை**

## 'றிட்' மனுக்கள் இம்மாதம் 9ம் தேதி விசாரணை!

கொழும்பு)

திருகோணமலை நகரசபை தேர்தல் பட்டியல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயர் தொடர்பாக தமிழ் காங்கிரஸினால் நேற்று அப்பீல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 'றிட்' மனு இம் மாதம் 9ம் தேதி திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம், சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் முதல் வேட்பாளர் சட்டத்தரணி செல்வமுருகானந்தன். திருகோணமலை தமிழ் காங்கிரஸ் முதல் வேட்பாளர் கே. சிவபாலன் ஆகியோர் இந்த றிட்மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

தேர்தல் ஆணையாளரின் உத்தியோக பூர்வமான ஆவணத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளில் தமிழர் விடுதலை கூட்டணி என்ற பெயர் இல்லையென்றும் ஆனால் தமிழர் விடுதலை கூட்டணி என்ற பெயரில் உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிட பெயர் பட்டியல் சமர்ப்பித்துள்ளரென்றும் ஆதலால் கூட்டணி தாக்கல் செய்துள்ள பட்டியலை நிராகரிக்கும் படியும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (இ)

## இலங்கை வானொலியில் இருவர் கட்டாய லீவில்!

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ் செய்திப் பிரிவைச் சேர்ந்த பொறுப்பாசிரியரும் அலுவலக நிருபரும் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார்.

மேதினம் சம்பந்தமாகத் தொகுத்தளிக்கப்பட்ட ஒன்றேகால் மணிநேர விசேட நிகழ்ச்சியில் இரு அமைச்சர்களின் பேச்சுக்களையும் அவர்களது பெயர்களையும் இருட்டடிப்புச் செய்ததாகச் செய்யப்பட்ட

(8ம் பக்கம் பார்க்க

நாளை ஆரம்பம்

85 AUG. A/L விஞ்ஞானம்

MASTER
INSTITUES
B. M. C. Lane, Jaffna

7120

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத் துறை வீதி, 96-ம் இலக்கக் காணிக்கு அருகாமையில் இரண்டுபரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (யோக சுவாமியார் ஆச்சிரமத்திற்கும் இந்து மகா வித்தியாலயத்திற்கும் அருகாமையில்) விபரம்: C H. S நாயகம், 96, கொழும்புத் துறை வீதி, யாழ்ப்பாணம். 7131

மிற்சுபிசி டெலிகா T 120 V 1979 மொடல் பதிவு செய்யப் படாதது. உன்னத நிலையில் விற்பனைக்குண்டு. விற்பா மோட்டோர்ஸ், 68, கிராண்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23255. [7129]

புதிய ஹறூவ்ஜேர்ணி[M] 1982-ம் ஆண்டு மொடல் 26 ஆசனங்களுடைய மினி பஸ் [ஆறு மாதங்கள் பாவிக்கப் பட்டது] நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 53/6, அல்லைசந்திரசேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 7124

வட்டுக்கோட்டை, சங்கரத்தையில் வீடு கட்டுவதற்குரிய 12 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சிதம்பரநாதன், மே/பா, எஸ். ஆர். கனகநாயகம், 61, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 7122

## பயிற்சி

யாழ். நகரில் பிரபல நிறுவனத்தில் குழாய் பொருத்துனர் (Plumbers) பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. பயிற்சிக்காலம் ஒரு மாதம். அனைவரும் விண்ணப்பிக்கலாம். 10-5-83க்கு முன்பாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல 7108, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [7108]

## தேவை

அரைக்கும் இயந்திரத்தில் (கிறைண்டரில்) வேலை செய்வதற்கு முன் அனுபவமுள்ள நல்லொழுக்கமுள்ள, விசாரக்கம் செய்த, ஆண்கள்தேவை. முன் வேலைசெய்த ஸ்தாபனத்தில் வழங்கப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 40 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பப்படுவர். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 191 [53], காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 7130

## குத்தகைக்கு

பளை புலோப்பளையில் இருக்கும் சோனகன்காடு தென்னந் தோட்டத்தில் 1983-ம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி முதல் 12 மாதங்களுக்கு விழும் ஓலைகள் குத்தகைக்கு கொடுக்கப் படும். தோட்டத்தின் விஸ்தீரணம் 72 ஏக்கர். குத்தகை எடுக்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். 7 A, கச்சேரி நல்லூர் றோட், சுண்டிக்குளி. [7100]

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த.

உயர்தர பரீட்சை 1985

இந்த வகுப்புகளில் சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் 15-5-83ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்.

தொலைபேசி எண்: 22617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
[7105]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பிஸ்கால் ஏலவிற்பனவு விளம்பரம்

மாவட்ட நீதிமன்றம் மல்லாகம்

கதிரிப்பிள்ளை கயிலாயபிள்ளை,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் — வழக்காளி

வழ. இல. MS / 4113 எதிராக

சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்,
ஆஸ்பத்திரி ஒழுங்கை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம், — எதிராளி

மல்லாகம் மாவட்ட மன்றில் காசு / 4113 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1983-ம் ஆண்டு ஆனி மாதம் 8-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 6200/- (அறுபிரத்து இருநூறு ரூபா)ம் இன்னும் முதல் 5000/- ரூபா (ஐயாயிரம் ரூபா)க்குதுக்கு 9-3-1981 தொடக்கம் 18%வீத வட்டியும் பின்னர் முழுத்தொகை முழுவதும் இறுக்கப்படும்வரை 5% வீதவட்டியும் வழக்குச் செலவும் (செலவு பின்னர் அறிவிக்கப்படும்) செலவு பணத்தில் ஓர் பகுதியாக 1000-00 ரூபாய் தரப்பட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி பலாலி கோவிற்பற்று புன்னாலைக் கட்டுவன் இறை ''கொல்லைனோலை'' நில பரப்பு 8 எல்லை கிழக்கு சிவலோகநாதன் பெண் அங்காதேவியின் ஆதனம் வடக்கு பாலசிங்கத்தின் ஆதனம். மேற்கு விருபாகமூர்த்தி பெண் நாகம்மாவின் ஆதனம். தெற்கு சிவலோகநாதன் பெண் அங்காதேவியின் ஆதனம் இவ்வெல்லைப்படி இருடங்கலும்.

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
(ஒப்பம், பிஸ்கால்)

மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்,
2-5-83. 7128

## ரூபா 1,000 அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை சங்கரத்தை ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் புனருத்தாரண திருப்பணி வேலைகள் அராலியூர் திரு தம்பிராஜா குழுவினரால் நிறைவு பெற்று வருகின்றன. எதிர்வரும் ஆவணி மாதம் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். மானிப்பாய் மருதடி ஸ்ரீ விநாயகர் ஆலய தர்மகர்த்தா திரு மு. இராமேஸ்வரம் திருப்பணிக்கு ஆயிரம் ரூபாவை ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு எஸ் ஆர் கனகநாயகத்திடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

## விழிப்புக்குழு அமைக்கப்படும்

[மன்னார்]

தலைமன்னார் பகுதியில் இடம்பெறும் திருட்டுச்சம்பவங்களை தடைசெய்து பொலிசாரின் கடமைக்கு உதவும் பொருட்டு விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்படும்.

இவ்வாறு கடந்த புதன்கிழமை நடைபெற்ற தலைமன்னார் கிராமோதய சபைக் கூட்டத்தில் உரையாற்றிய கிராமோதயசபை தலைவர் திரு. அல்பிறட்கிளா தெரிவித்தார்.

## கூட்டணியைவிட்டு சிறிதும் விலகவில்லை

(புலோலி)

'நான் இம்முறை பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடவில்லை என்றாலும் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கொள்கைகளிலிருந்து சிறிதும் விலகவில்லை. பதினைந்து ஆண்டுகளாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஆயுட்கால உறுப்பினராக இருந்துவரும் நான் வேறு எந்தக் கட்சியிலும் சேரவில்லை

இவ்வாறு பருத்தித்துறை நகரசபை உபதலைவர் டாக்டர் எஸ். வேல்முருகு (த வி கூ) விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

நான் இம்முறை பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடவில்லை, ஆனால் என்னைப்பற்றிச் சிலர் தவறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர், தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஆயுட்கால உறுப்பினராக இருந்து வரும் நான் புலோலி மேற்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் பொருளாளராக இருக்கின்றேன் வேறு எந்தக் கட்சியிலும் நான் சேரவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

## சிரமதானமூலம் குளத்தை திருத்தமுடிவு

(கரவெட்டி)

கப்புதூ வெளிப்புலம் கடலைக் கண்டிவீதி கொள்ளைக் கத்தியான் வீதி ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்த மைக்காக உடுப்பிட்டி எம் பி. திரு. க. இராசலிங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமொன்று அண்மையில் நடைபெற்ற கப்புதூ கிராமோதய சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கிராமோதய சபைத் தலைவர் திரு: வ செல்லையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கப்புதூ வெட்டிக்காள் குளத்தை இம்மாதம் 7ம் திகதி சிரமதானமூலம் திருத்தியமைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (க)

## மட்டக்களப்பு பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவை தொடர்ந்து பேணும்படி பணிப்புரை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் நாட்டில் குற்றச் செயல்கள் குறைந்த மாவட்டங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. இந்நிலை தொடர்ந்தும் நீடிக்கக்கூடிய வகையில் பொலிசார் தமது பணிகளை மேற்கொள்ள வேண்டும் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் மட்டக்களப்பு பொலிசாருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

மட்டக்களப்புமாவட்ட மக்கள் குற்றச்செயல்களை ஒழிப்பதில் பொலிசாருக்கும் பேருதவியாக இருந்து வருகின்றனர் என்றும் இந் நிலையைத் தொடர்ந்து பேணுவதற்குப் பொலிசார் பொது மக்களுடன் அந்நியோன்னியமாகப் பழகி அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமெனத் தாம் அப்பிராந்திய பொலிசாரிடம் தெரிவித்துள்ளதாக திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார். பொலிசார் எச்சந்தர்ப்பத்திலும் இன, மத, சாதி பேதமின்றிக் கடமையாற்ற வேண்டும் என்று தாம் அவர்களைக் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அபிவிருத்தி திட்டங்கள்: பெண்களின் பங்கு முக்கியம்

(திருகோணமலை)

''இன்றைய சமுதாயத்தில் ஏறத்தாழ ஐம்பது சத வீதத்தினர் மகளிராக இருத்தலால் பெண்களின் பங்களிப்பு இல்லாத எந்த அபிவிருத்தித் திட்டமும் முழுமையான பலனைத் தராது எனவே அபிவிருத்தித் திட்டங்களில் பெண்களின் ஈடுபாடு ஒரு முக்கிய அம்சம் ''

திருகோணமலைக் கச்சேரியில் உள்ள திட்டமிடல் பிரிவும், மீன்பிடி அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்தும் மீனவ மகளிர் பயிற்சித் திட்டத்தின்கீழ் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் திரு என். பத்மநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து கூறியதாவது:- ''சமுதாயத்தில் சனத்தொகை அபிவிருத்திவீதத்தை நோக்கினால் இன்னும் சில ஆண்டுகளில் பெண்களின் வீதம் ஆண்களை விஞ்சும் வாய்ப்பு இருக்கிறது இத்தகைய சூழ்நிலையில் அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றியடையவேண்டுமாயின் மகளிரை அவற்றில் ஈடுபடுத்தல் அத்தியாவசியமாகும்,

முன்னர், பெண்கள் தொழிலில் போதிய ஆர்வம் காட்டவில்லை. பின்னரும். அவர்கள் ஆசிரியத் தொழிலை மட்டுமே நாடினர். ஆனால் இன்று நிலைமை மாறி விண்வெளிப் பயணம் உட்பட அனைத்துத் துறைகளிலும் ஈடுபடுகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பிரதமர்களாகப் பெண்கள் திகழ்கின்றார்கள் ஏன், திருகோணமலையைப் பொறுத்தளவில் இன்று நகரசபைத் தலைவராக ஒரு பெண்மணியே விளங்குகின்றார். பெண்கள் அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடுவதுடன் சுயதொழிற் பயிற்சியையும் பெறுவது நலம்.'' [க]

## காணியை நன்கொடையாக வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்திற்கு இருமாடிக்கட்டிடம் கட்டுவதற்காக அவ்வூரைச் சேர்ந்த திரு. ஆ சின்னையா ஏழு பரப்புக் காணியை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இந்நன்கொடையை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் சார்பில் அதிபரும், உப தலைவர் திரு. கே. வி முத்துக்குமாரசாமியும், செயலாளர் திரு. த ஆறுமுகமும் ஏற்றுக்கொண்டனர்.

## சட்டத்தரணிகள் சங்க நிர்வாகிகள்

[மாவிட்டபுரம்]

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற மண்டபத்தில் சட்டத்தரணி எம். சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது.

புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவாகினர். தலைவர்: சட்டத்தரணி சிவ. ஸ்ரீதரன், உப தலைவர்கள் சட்டத்தரணிகள் க. குணரத்தினம், கே. பரிராஜா, கு விசுவலிங்கம், மு. திருநாவுக்கரசு செயலாளர் சட்டத்தரணி வி. எஸ். கணேசலிங்கம், உப செயலாளர் சட்டத்தரணி எஸ். தியாகேந்திர, பொருளாளர் சட்டத்தரணி எம் யோககுமார்.

5 பேர் கொண்ட நிர்வாக சபையும் 5 பேர் கொண்ட நூல் நிலையக்குழுவும், தாய்ச்சங்கப் பிரதிநிதிகளாக தலைவர், செயலாளர் ஆகியோருடன் சட்டத்தரணிகள் ஆர். ஜே செல்வரத்தினம், கே. குணரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் [க]

## புதிய ஆயருக்கு வாழ்த்து

[கரவெட்டி]

ரோம் நகரில் புதிய ஆயராக அபிஷேகம் செய்யப்படவுள்ள அதி. வண, பிதா இங்னேசியஸ் சுவாம்பிள்ளைக்கு யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் வாழ்த்துத் தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளது.

(க)

## நடப்புவருட நிர்வாகிகள்

(புலோலி)

பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 21 ஆண்டுப் பொதுக்கூட்டம் மன்ற மண்டபத்தில் தலைவர் திரு. கோ. குமாரவேலு தலைமையில் நடைபெற்றது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: தி. புவனேஸ்வரி அம்மையார், தலைவர்: கோ. குமாரவேலு, உபதலைவர் சு. புவனராணி, இணைச்செயலாளர்கள் க. நடனசபாபதி, இ யோகரஞ்சிதம், பொருளாளர்: து. நவரஞ்சனு, நூலகப் பொறுப்பாளர் கே. மதியழகன். முகாமையாளர் சு விஜயமூர்த்தி, செயற்குழு உறுப்பினர்கள் இ. கனகேசுரன், கோ இராசரத்தினம், இ. குகநாயகி, இ. மனோன்மணி, சு சீதாதேவி, க. சின்னத்தம்பி கேஸ்வரி ந யோகசௌந்தரி, ச செல்வநிதி. கு. சூரியகுமாரி, சு. கனகராணி.

# தமிழ் நாட்டில் ஹர்த்தால்:

## ஆயிரத்திற்குமதிகமானோர் கைது!

### விடுதலைசெய்யுமாறு கருணாநிதி கோரிக்கை

சென்னை, மே. 6

உத்தேச நுழைவு வரி விதிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று தமிழ் நாடு முழுவதும் வர்த்தகக் கூட்டுக்கமிட்டியினல் மேற்கொள்ளப் படவுள்ள ஹர்த்தாலையொட்டி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆயிரத்திற்குமதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 200 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பிரபல வர்த்தகர்களும் அடங்குவர். இன்று கடைகளைத் திறந்துவைத்திருப்பவர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுமென்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

ஹர்த்தாலையொட்டி நேற்று முதல் சென்னைநகரில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. 100 வாகனங்களில் பொலிசார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ரயில், பஸ் நிலையங்களிலும் கடும் பொலிஸ் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று சென்னை பொலிஸ் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு தி. மு. க தலைவர் திரு. மு. கருணாநிதியும்மற்றும் எதிர்க்கட்சி தலைவர்களும் தமிழ்நாடு அரசைக் கேட்டுள்ளனர். [வெ]

### ஜம்முகாஷ்மீர் சட்டப்பேரவை தேர்தல்

ஜம்முகாஷ்மீர் சட்டப்பேரவைத்தேர்தல் அடுத்த மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [வெ]

### மேலதிக விமானசேவை

புதுடில்லி, மே. 6

கொழும்பிற்கும் இந்தியாவுக்குமிடையே மேலதிக விமானசேவையை நடத்த இந்திய ஏயர்லைன்ஸ் நிறுவனம் முன்வந்துள்ளது.

இச்சேவை இன்றுமுதல் நடைபெறவுள்ளதாக இந்நிறுவனத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (வெ)

## நடிகை மீனுகுமாரி சொத்து ஏலத்தில் விடப்பட்டது

சென்னை, மே. 6

கடந்த காலத்தில் சிறந்த நடிகையென்று பெயர் பெற்ற மீனுகுமாரியின் சொத்துக்கள் பம்பாயில் ஏலத்தில் விடப்பட்டன.

கே.கே. மிஸ்ட்ரி என்ற வர்த்தகரே 8 லட்சம் ரூபாய்க்கு அந்தச் சொத்துக்களை ஏலத்தில் எடுத்தார்.

நடிகை மீனுகுமாரி 1972ம் ஆண்டு மார்ச் மாதம் காலமானர். அதற்கு 8 வாரம் முன்னதாக ஒரு உயில் எழுதிவைத்தார். [வெ]

## 'அசாம் படுகொலைகள்குறித்து விசாரணை நடைபெறும்'

### உள்துறை அமைச்சர் சேத்தி கூறுகிறர்

புதுடில்லி, மே 6

அசாமில் அண்மையில்இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக வெளிமாநிலங்களிலுள்ள உயரதிகாரிகள் விசாரணை நடத்தவுள்ளதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சர் திரு. பி. சி. சேத்தி நேற்று லோக் சபாவில் தெரிவித்தார்.

அசாமில் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப் பட்டுள்ளதாகவும், அங்கு சேவைக்காகபெருமளவு பொலிசார் அனுப்பப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அசாமில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களினல்பாதிக்கப்பட்டவர்களுக்கு சகலஉதவிகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும திரு. சேத்தி தெரிவித்தார்.

அசாமில் இடம் பெற்ற படுகொலைகள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று இந்திய எதிர்க்கட்சித் தலைவர்கள் மத்திய அரசைக் கேட்டிருந்தது தெரிந்ததே. (வெ)

### ஆட்சி மொழியாக ஆங்கிலமும் நீடிக்கும்

புதுடில்லி, மே. 6

ஹிந்திபேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் ஒர் இணை மொழியாக நீடிக்கும் என்று இந்தியஉள்துறை துணையமைச்சர் திரு பி வெங்கடசுப்பையா ராஜ்யசபாவில் தெரிவித்தார்.

இது விடயத்தில் ஜவஹர்லால் நேரு அளித்த உறுதிமொழியில் அரசு உறுதியாக இருக்கிறது என்றார் அவர். (வெ)

### திருமலையில் குழாய் உற்பத்தி தொழிற்சாலை

(திருகோணமலை)

திருகோணமலை மட்கோவ் பகுதியில் குழாய் உற்பத்தி சம்பந்தமான தொழிற்சாலை ஒன்றை மெக்சிகோ தனியார் வியாபார நிறுவனமொன்று இலங்கை தனியார் நிறுவனமொன்றுடன் இணைந்தமைக்க உள்ளது.

இது சம்பந்தமாக பூர்வாங்க மதிப்பீடு நடாத்த மெக்சிகோ நிறுவன இயக்குநர் திரு எவியசர் திருகோணமலைக்கு வருகைதந்தபோது இலங்கை துறைமுக அதிகாரசபை மேற்பார்வையாளர் திரு. எஸ் பரமலிங்கம் அவரை அழைத்துச் சென்று அவர்களுக்குத் தேவைப்படும் முப்பத்தைந்து ஏக்கர் காணியைக் காண்பித்தார்.

பூர்வாங்க மதிப்பீடு சம்பந்தமான அறிக்கை ஒன்று தயாராகிறது. (க)

## 'இந்தியா இக்கட்டானநிலையை எதிர்நோக்கியுள்ளது'

### பிரதமர் இந்திரா கூறுகிறர்

புதுடில்லி, மே 6

"நாட்டில் முன்னெப்போதுமில்லாதளவு வறட்சி நிலவி வருகிறது. இது குறித்து மக்கள் கவனமாக இருக்கவேண்டும். இந்தியா தற்போது இக்கட்டான நிலையை எதிர்நோக்கியுள்ளது"

இவ்வாறு இந்தியப்பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி ஐ எவ் ஐ பயிற்சியில் கலந்துகொண்டோர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இந்தியா தனது கொள்கையை உறுதியுடன் பின்பற்றுவதற்கு தேசிய நலன்களே காரணமாகும். வெளிநாடுகளின் தகவல்துறைகளில் இந்தியா பற்றி கூறப்படும் குறைகளை ஆட்சேபித்து வருகிறோம்.

"எண்ணெய்வளமுள்ள நாடுகளைத் தவிர ஏனைய நாடுகளில் எல்லாம் பொருளாதாரப் பிரச்னை நிலவிவருகிறது இந்தியாவை மட்டும் வறுமையுள்ள நாடாகச் சித்தரித்துக் காட்ட வெளிநாடுகள் முயன்று வருவது துரதிர்ஷ்டமானது" என்றுர். (வெ)

### மத்திய மாநில அரசு உறவுகள்

புதுடில்லி, மே. 6

இந்திய மத்திய, மாநில அரசுகளுக்கிடையே நேசமான உறவுகள் இருக்கவேண்டுமென ஆந்திரா மாநில முதலமைச்சர் திரு என் டி ராமராவ் தெரிவித்துள்ளார். [வெ]

## சென்னை தொலைக்காட்சியில் ஞாயிறுதோறும் தமிழ்ப்படம்

சென்னை, மே. 6

சென்னை தொலைக்காட்சி நிலையம் இம்மாதம் முதலாம் திகதிமுதல் ஞாயிற்றுக்கிழமை மாலையில் தமிழ்த் திரைப் படத்தை ஒளிபரப்பி வருகிறது.

கடந்த ஆறுமாத காலமாக ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் தமிழ்த்திரைப்படம் ஒளிபரப்பப்பட்டு வந்தது.

இதன் பிரகாரம் இம்மாதம் முதலாம் திகதி மாலை சென்னை தொலைக்காட்சியில் சிவாஜி கணேசன் நடித்த "கீழ்வானம் சிவக்கும்" என்ற தமிழ்த் திரைப்படம் ஒளிபரப்பப்பட்டது. [வெ]

## "இலங்கையில் சகல மக்களுக்கும் சுகாதார வசதி கிடைக்கத் திட்டம்"

### ஜெனிவா மகாநாட்டில் சுகாதார அமைச்சர் உரை

ஜெனீவா, மே, 6

"இலங்கையில் சகல மக்களுக்கும் சுகாதார வசதிகள் கிடைக்கக்கூடிய வகையில் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது."

இவ்வாறு சுகாதார அமைச்சர் திருமதி சுனீத்ரா ரணசிங்கா ஜெனீவாவில் நடைபெறும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்த மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"சுகாதார சேவையில் எதிர்நோக்கும் பிரச்னைகள்பற்றி ஆராய கொழும்பில் எதிர் வரும் ஜூலை மாதம் மகாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளது.

"வெளிநாடுகளில் வேலை தேடிச் செல்லும் வைத்தியர்களின் எண்ணிக்கை இலங்கையில் குறைந்துவருகிறது" என்றுர். [வெ]

## இந்தியா-சோவியத் பேச்சுவார்த்தை

புதுடில்லி, மே, 6

சோவியத் துணைப் பிரதமர் எதிர்வரும் புதன்கிழமை இந்தியாவிற்கு விஜயஞ்செய்யவுள்ளார்.

இவருடன் விஜயஞ்செய்யும் சோவியத் குழுவுடன் இந்திய பொருளாதாரப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளது.

இந்தியாவின் சார்பில் வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவுள்ளார். (வெ)

## சீனியில் கொள்ளைலாபம்; 1,000 ரூபா அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட சிறையும்

(திருகோணமலை)

சீனி விற்பனையில் கொள்ளை லாபம் பெற்ற ஒருவியாபாரிக்கு திருகோணமலை நீதிபதி திரு சரத் டீ ஆபுரு 1000ரூபா அபராதம் விதித்தார்.

அதிக விலைக்குச் சீனிவிற்றதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரியான எஸ் சண்முகநாதனுக்கு ஆயிரம் ரூபா அபராதமும் ஐந்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட நான்கு வார கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. (க)

### மணிவாக்கு

புலியைப் படைத்ததற்குக் கடவுளைக் குறை கூறாதே; அதற்குச் சிறகைக் கொடுக்காததற்கு இறைவனுக்கு நன்றிகூறு.

—இந்தியப்பழமொழி

# நமது நோக்கு

## மீண்டும் ஆனையிறவுத்திட்டம்!

வடபகுதிக்கு மகாவலியைக் கொண்டுவர முடியுமென்று சுமார் 50 வருடங்களுக்கு முன் குரல் கொடுத்தவர் அமரர் கௌரவ. பாலசிங்கம் அவர்கள்; பொருளாதார சட்டஆராய்ச்சியில் அனுபவம் நிறைந்த பெரியார் அவர்.

அவருக்குப் பித்துப் பிடித்திருக்கிறதென்று அக்காலத்தில் கருதிய 'பெரியோர்' மகாவலித் திட்டம் உருவெடுத்தகாலத்தில் கௌரவ பாலசிங்கத்தின் தூரநோக்கைப் பாராட்டத் தொடங்கினர். அவ்வளவுதான், இது நம்மவர்களின் பிறவிக்குணமென்றே சொல்லலாம்.

புதிய வழிகளைச் சிந்திக்கும் ஆற்றல்பெற்ற முன்னோடிகள் தங்கள் காலத்தில் கனம் பண்ணப்படுவது அரிதினும் அரிது இன்று அவர் பிறந்த 105 வருடங்களுக்குப் பின் தீர்க்கதரிசி பாலசிங்கம் யாரென்பது இன்றைய இளைஞர்களுக்குத் தெரியாது.

இன்றும் மகாவலி என்ற தெய்வம் வடக்கேவர சம்மதித்தாலும் அரசியல் ஆசாரிகள் விடைகொடுக்கச் சித்தமுடையவர்களாக இல்லை; அதற்கு இன்றைய ஆட்சியாளர்கள் மட்டும் பொறுப்பல்ல. நாட்டின் சுதந்திர ஆட்சி இவ்விதத்திட்டத்தை வடபகுதியார் கனவு காண்பதற்கே இடமளித்து வரவில்லை.

மகாவலி போகட்டும், அடுத்ததிட்டம் ஆனையிறவு ஏரியை நன்னீர் ஏரியாக்கும் திட்டம்; இது சுமார் முப்பது வருடங்களுக்கு முன் தயாரிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்ட திட்டம். இலங்கையின் முதற் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் ஆசிபெற்று நடைமுறைப்படுத்தும் அறிகுறிகள் தென்பட்ட போதும், அவருடைய ஆட்சி திடீரென முடிவடைந்ததும் அது காலாவதியாயிற்று. யாழ்ப்பாணம் 'பாலைவனமென்று பட்டஞ்சொன்ன புவியியல் பேராசிரியர்களையும் இந்த நாடு கண்டது.

கடந்த முப்பது வருடகாலமாக வடபகுதிக்கு, குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு பூமியின் கீழ் உள்ள நீர்வளம் எவ்வாறு பயன்படுத்தப் படலாமென்ற ஆலோசனைகள் பேச்சிலே இருந்துவந்தன.

இன்று திட்டமிடல்மந்திரி சபையின் பொறுப்பாதாரத் திட்டக்குழுவிற்குத் தலைமை தாங்குபவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனா அவர்களே.

நீண்டகாலம் கைவிடப்பட்ட ஆனையிறவுத்திட்டம் அவருடைய கவனத்தை ஈர்த்திருப்பது 'முற்றாய் இல்லை என்பதிலும் பார்க்க தாமதித்தாவது கிடைப்பது நல்லது' என்ற முதுமொழிக்கு உதாரணம் போலுறது.

தமிழ் மக்களின் அரசியல், வடபகுதியில் நிலவிவரும் குழப்பநிலை, இவைபோன்ற பல தடைகள் இப்பகுதியின் அபிவிருத்தி முன்னேறமுடியாததற்குக்காரணங்களாகக் குறிப்பிடப்பட்டு வருகின்றன.

''நாய்கள் குலைக்கட்டும், பாலைவனப் பயணம் தொடரட்டும்'' என்ற கொள்கையே ஒரு நியாயமான ஆட்சி கடைப்பிடிக்க வேண்டியது.

இலங்கையின் ஒருமுக்கிய பகுதி – அதுவும் வறண்ட பிரதேசமாகத் தண்ணீர் தட்டுப்பாட்டால் இவ்வளவு நீண்ட காலம் தவிப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பது ஆட்சியின் பெருங்குறை மட்டுமல்ல; ஒரு பெரும் பாபச் செயலுமாகும்.

இன்றுவரை இதுபற்றி அக்கறை கொண்டிருக்கும் ஜனாதிபதி அவர்கள் வேண்டிய மாற்றம் செய்வதில் காலந்தைத் தாழ்த்தாமல் திட்டத்தைப் பூர்த்தி செய்வதே நீதியாகும்.

1980ல் இத்திட்டத்துக்கு 2 கோடி 10 லட்சம் ரூபாய் தேவைப்பட்டதென்றால், இன்று அதன் அதிகரிப்பு எவ்வளவு என்று சொல்ல முடியாது

1985ல் திட்டம் ஆரம்பிக்கப்பட இருப்பதாக, மூன்று வருடம் பூர்த்தி செய்வதற்கு தேவைப்படுவதால் நிதி நிலைமை என்ன கோளாறுகளை ஏற்படுத்தும் என்று சொல்வதற்கில்லை.

பிறநாட்டு நிதி உதவி பெருமளவிற்குக் கிடைக்கும் அரசுக்கு இது ஒரு பாரிய திட்டமா?

மகாபோதி படும்பாடு இதற்கும் உண்டானால் வடபகுதிக்குரிய நன்னீர் எட்டாத கொம்பிலிருக்கும் கனியென்றே கொள்ள வேண்டும்.

## மறைந்த தாரகை

இலங்கையில் முதன் முதலாக வெளிவந்த அச்சுப் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் வெளியாகும் ''உதய தாரகை'' ''Morning Star'' என்பதை இன்று பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

இலங்கையில் மட்டுமல்ல, பல வெளிநாடுகளுக்குச் செல்லும் இப்பத்திரிகையின் ஆசிரியராக சுமார் நாற்பத்திரண்டு வருடம் திறம்படக் கடமையாற்றிய ஆசிரியப் பெருந்தகை திருமதி எஸ். குலத்துங்கம் காலமானதை நாம் வருத்தத்துடன் நேற்றைய பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தோம்.

பத்திரிகை ஆசிரியர்மட்டுமல்ல; இலங்கையின் ஒரு பிரபல கல்லூரியான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நீண்டகாலம் பேராசானாக பெரும் புகழ்பெற்ற அமரர் லைமன் குலத்துங்கம் சுற்றில் அக்கல்லூரியின் தலைமைப் பீடத்தில் அமர்ந்தது அவருடைய பல திறப்பட்ட ஆற்றலைக் குறிக்கிறது.

இந்நாட்டிலும், வெளிநாடுகள் பலவற்றிலும் அவருடைய ஆசிரியப்பணியின் திறமையால் உயர்ந்த பல்லாயிரம் மாணவர்களுக்கு அவருடைய மறைவுபெருஞ் சோகமான செய்தியாகும்.

அவர் தீட்டிய தரமான ஆசிரியத் தலையங்கங்களை ஆங்கிலத்தில் ரசித்த வாசகர் உலகிற்கு இது ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

# இன்று திருநாவுக்கரசர் குருபூசை

# அப்பர் காட்டும் ஐந்தெழுத்துண்மை

அரசாங்கமும், அரசியற் தலைவர்களும் தமது கொள்கைகளையும் சாதனைகளையும் அடிக்கடி வலியுறுத்துவர் வலியுறுத்தாவிட்டால் மக்கள் அவற்றை மறந்துவிடுவார்கள். இப்படியான மறதியையே 'நாறு நாளோதி ஆறு நாள் விடச் செடும்' என்னும் முதுமொழி விளக்குகின்றது. இம் மறதியால்வரும் கேட்டை நீக்கவே வேதாகம புராண இதிகாசங்களும் சமயாசிசாரியர்களும் பிரதானமான சமய உண்மைகளையும் சாதனைகளையும் திரும்பத் திரும்பப் பல கோணங்களில் வற்புறுத்துவர்.

சைவாசாரியர்களாகிய நால்வர் சமய உண்மைகளைப்பற்றி அறிந்திருந்தாலும் அறிந்த உண்மைகளில் சந்தேகம் கொள்ளாது தெளிவடையவும் அறிந்த உண்மைகளை அனுசரித்துவாழவும் ஏற்ற முறையில் பேருபகாரம் புரிந்தவர் திருநாவுக்கரசசுவாமிகள். சமய உண்மைகளையும் சமய ஒழுக்கங்களையும் தன் வாக்கின் சிறப்பாலும் வாழ்வின் சாதனையாலும் தெளியவைத்தார் அப்பர் சுவாமிகள்.

இவர் திருவைந்தெழுத்தின் பெருமை யாவரும் உலகிற்கு வெளிப்பட உணர்த்தியுள்ளார். இவரை சமணர்கள் கல்லோடு கட்டிக் கடலில்விட்டார்கள். அப்போது நடப்பது நடக்கட்டும் நான் திருவைந்தெழுத்தால் இறைவனைத் துதிப்பேன் என்று சொற்றுணை வேதியன் பாடினார். உடனே கல்லே தெப்பமாக மிதந்தது நற்றுணையாவது நமச்சிவாயவே – நலமிக்க கொடுப்பது நமச்சிவாயவே என்று பலவிதமாக பஞ்சாட்சர மகிமையை வாக்கினால் சொல்லியது மட்டுமன்றி, பஞ்சாட்சரத்தைச் சொல்லி இறைவனை வணங்குவதால் இறைவன் எவ்விதமாக உதவிசெய்கின்றான் என்பதையும் கல்லே துணையாகக் கடலில் மிதந்து கரைசேர்ந்து காட்டியுள்ளார்

கடலில் மிதந்து கரையை அடைந்தும் திருநாவுக்கரசர் அக்கடற்கரையில் அமர்ந்திருந்த திருப்பாதிருப்புலியூர் என்னும் தலத்திற்குச் சென்று இறைவனை வணங்கும்போது 'திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்; தருவாய் சிவகதி நீ திருப்பாதிருப் புலியூர் அரனே' என்று தேவாரம் பாடி வணங்குவதன் மூலம் திருவைந்தெழுத்தைச் சொல்லித் திருநீறு அணிவதனால் சிவபெருமானிடம் நமக்கு ஏற்படக்கூடிய உரிமையையும், திருநீற்றினதும் திருவைந்தெழுத்தினதும் ஆற்றலையும் உணர்த்துகின்றார் தொழிலாளி தான் செய்த வேலையின் கூலியை உரிமையுடன் கேட்பதுபோலவும், மகன் தந்தையிடம் தன் தேவையை உரிமையுடன் கேட்பதுபோலவும் திருநாவுக்கரசர் சிவாயநமவென்று நீறணிந்தேன் தருவாய் சிவகதி என்று கேட்டுப் பாடுகின்றார்.

தமிழ் நாட்டிலுள்ள சிவாலயங்கள் எல்லாவற்றிற்கும் சென்று உழவாரத் திருப்பணி செய்தும், செஞ்சொற் தமிழ்ப் பாமாலைகள் சூட்டியும் வழிபட்டவர் திருநாவுக்கரசர் ஒவ்வொரு ஆலயத்தில் ஒவ்வொரு சிறப்புடன் சிவப்பொலிவையும் சிவானந்தத்தையும் அனுபவித்த அப்பர், தேவரும் முனிவரும் வணங்குதற்குரிய கயிலைநாயகனைத் தரிசித்து ஆனந்திக்க கயிலைக்கு யாத்திரை செய்தார். பின் சிவானுக்கிரகத்தால் திருவையாற்றிலேயே கயிலைக் காட்சியைக் கண்டு தன் எண்ணம் நிறைவெய்தினார்.

இப்படி தலயாத்திரையிலும் கைத் திருத்தொண்டிலும் மகிழ்ந்த திருநாவுக்கரசர், மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் என்றும், கனைகடலைக் குலவரையைக் கலங்கக் காற்றைக் கலந்து நின்றவன் இறைவன் என்றும் இறைவனின் தன்மைகளைக் கூறுவார்,

சிவனருளால் சூலைநோயைப் பெற்று சமண சமயத்திலிருந்தும் விடுபட்டு மேன்மையுள்ளதுபோன்று உலகவாழ்வை சர்வ நிச்சயமென்று நம்பாது சிவனருளே நம்முடலினும் பார்க்க நமக்கு அவசியமானது, நன்மை தரக்கூடியது என்று உணரத்தக்கதக்க தெய்வத் திருநெறித் தமிழ்ப் பாக்களை வழங்கிய அப்பர் சுவாமிகளை நம் குரவராகக் கொண்டு அவரையும் சிவனையும் வழிபட்டு உய்தியடைவோம். அப்பர் சுவாமிகளின் தேவாரங்கள்மூலம் அப்பர் சுவாமிகளுடனும் சிவபெருமானுடனும் தொடர்பு கொள்வோம்.

தி. பொன்னம்பலவாணர்

# தமிழும் சைவமும் வளர்த்த இலக்கணசுவாமிகள்



ஓடும் பொன்னும் ஒப்ப நோக்கும் உலகப் பற்றற்ற மகாதுறவியெனச் சைவ மக்களாற் சிறப்பாகவும் தமிழ் மக்களாற் பொதுவாகவும் பாராட்டப்பெற்று வந்த ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் தமது பதினைந்தாம் வயதாகிய சிறு பிராயத்திலேயே யாழ்ப்பாணத்தை விட்டு புண்ணியபூமியெனப்படும் இந்தியாவிற்குச் சென்றவர், பின்னர் எக்காலத்தேனும் இங்கு மீண்டிலரெனினும் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து சிதம்பரம் சென்ற ஞானப்பிரகாச சுவாமிகளைப் போல் இத்துறவியாரும் யாழ்ப்பாணத்தைச் சன்ம பூமியாகக் கொண்டுள்ளாரென்பதைச் சிந்திக்கும்போது யாழ்ப்பாண மக்களிடத்துப் பக்தியும் பெருமிதமும் ஏககாலத்திற் பிறக்கின்றன. கற்றோர், பெரியார், துறவிகள் சஞ்சரிக்குமூர் என் மாத்திரமல்ல அவர்கள் உதித்தற்கிடமாகவுள்ள நாடும் புண்ணிய நாடாகும்.

துறவிகளுட் பலர் தம்முடைய ஆன்மார்த்தத்தின் பொருட்டு உழைப்பதோடு மாத்திரம் அமைதலின்றித் தாம் கைக்கொண்ட சமயம், தாய் மொழி தம்நாட்டிலுள்ள மக்களின் நாட்டிலுள்ள ஞானவிருத்தி என்னும் இவற்றின் பொருட்டும் உழைப்பவராவர். நமது முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளும் இச்சிலரினும் சிலருளொருவரென மதிக்கத்தக்கவர்.

யாழ்ப்பாணத்து மக்களுட் பலர் இச்சுவாமிகளை நேரில் தரிசிக்கும் பேறுபெற்றிலரெனினும் தென்னிந்தியாவிலிருந்து இந்நாட்டிற்குக் காலந்தோறும் வந்தமீளும் ஸ்ரீஈசானசிவாசாரியர், சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் முதலாம் பல அறிஞரும் இந்தியாவிற்குச்சென்று துறவுபூண்டு விளங்கிய சச்சிதானந்தராசயோகிகள், யாழ்ப்பாணத்திலிருந்து சென்று சுவாமிகளைத் தரிசித்து அவர்களோடு ஊடாடிய சு. சிவபாதசுந்தரம் அவர்கள், மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் போன்ற சிலரும் இத்துறவியின் பெருமைகளைச் சொல்ல கேட்டுக் கேட்டு மகிழ்ச்சியடைந்து வரு

(5ம் பக்கம் பார்க்க)

இலக்கண சுவாமிகள் என்று சிறப்பாக அழைக்கப்பெறும் ஸ்ரீமத் முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகளின் குருபூசை இன்று 'ஈழநாடு' ஸ்தாபனத்தில் கொண்டாடப் பெறவுள்ளது. தமிழும் சைவமும் வளரத்தொண்டாற்றிய சுவாமிகள் பிறந்த காணியிலேயே ஈழநாடு' ஸ்தாபனம் அமைந்துள்ளது. 'ஈழநாடு' பத்திரிகைக்குச் சுவாமிகளின் ஆசி என்றும் உண்டு.

சுவாமிகளின் நினைவுமலரில் இந்துசாதன அதிபராக இருந்த ம. வே. திருஞானசம்பந்தர் எழுதிய கட்டுரையின் ஒருபகுதியை இங்கு தந்துள்ளோம்.

புலோற்பளை தாக்குதல் வழக்கு:

# காயமடைந்தவர்களுக்கு எதிரிகள் 4,500 ரூபா நஷ்டஈடு வழங்கினர்!

## வழக்கு சமாதானமாக இணங்கப்பட்டது

(மட்டுவில்)

புலோற்பளை தாக்குதல் வழக்கில், நீதவானின் புத்திமதியை ஏற்று எதிரிகள் சமாதானமாக இணங்க சம்மதித்ததைத் தொடர்ந்து காயமடைந்தவர்களுக்கு எதிரிகள் 4500 ரூபா நஷ்டஈடாக வழங்கினார்கள்.

இவ்வழக்கு சுற்று நீதிமன்றத்தில் நீதவான் எஸ். யோகசிகாமணி முன்னிலையில் நடைபெற்றது.

இந்த வழக்கில், புலோப்பளையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை யோகநாதன் தம்பிப்பிள்ளை வீரசிங்கம் ஆகிய இருவரும், சின்னவன் சின்னத்தம்பி, சின்னத்தம்பி கந்தசாமி ஆகிய இருவரையும் சைக்கிளால் தள்ளி விழுத்தி வாளால் வெட்டிக் காயப்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் எதிரிதரப்பில் சட்டத்தரணி திரு. சி. பாலகிருஷ்ணனும், வழக்காளி தரப்பில் பொலிசாரின் அனுசரணையுடன் சட்டத்தரணி திரு செ அம்பிகைபாலனும் ஆஜராகியிருந்தனர்.

இந்த வழக்கு விசாரணையை நீதவான் எடுத்துக்கொண்டார், முறைப்பாட்டுக்காரர்களின் வைத்திய அறிக்கையில் இரண்டாவது காயக்காரருக்கு 12 அங்குல நீளமான வாள் வெட்டின் காரணமாக அவரின் கை எலும்பு தாக்கம் ஏற்பட்டிருந்தது. இப் பாரதூரமான காயம் காரணமாக 315-ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த வழக்கு 317-ம் பிரிவுக்கு மாற்றம் செய்யப்பட்டது.

சாட்சிகளுக்கு விளைவிக்கப்பட்டுள்ள காயங்களோ பாரதூரமானவை என்றும் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டால் எதிரிகளுக்கு சிறைத்தண்டனையே கிடைக்கலாம் என்றும், காயங்களுக்கு நஷ்டஈடு வழங்கி சமரசமாய் சமாதானமாகச் செல்வது நல்லது என்றும் நீதவான் புத்திமதி கூறியதையடுத்து சமரச முயற்சி பலனளித்தது வழக்கை சமாதானமாக இணங்க சம்மதித்தனர்.

நீதவானின் புத்திமதியை ஏற்றுக்கொண்ட எதிரிகள் காயமடைந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்க சம்மதம் தெரிவித்தனர். 1-வது காயக்காரருக்கு 1500 ரூபாவும், 2-வது காயக்காரருக்கு 3000 ரூபாவும் வழங்குமாறு நீதிபதி பணித்ததைத் தொடர்ந்து நஷ்டஈடு வழங்கி சமாதானமாக சென்றனர். (உ)

---

சுதந்திரக்கட்சியை விட

# கொடிய சட்டத்தை யு.என்.பி உருவாக்கியது

## திருமலையில் அமிர்

[திருகோணமலை]

இந்து சமுத்திரத்தை ஒரு சமாதானப் பிராந்தியமாக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஆதரவு நல்கி, சீனன்வாடி எண்ணெய்க் குதங்களை வல்லரசுகளுக்கு வழங்குவதைக் கண்டித்து, அப்பாவி மக்களைத் துன்புறுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவல்ல ஒருகுழுவினைத் திருகோணமலை நகராண்மைக் கழக ஆட்சியாளராக தெரிவு செய்தல் வேண்டும்.

திருகோணமலை பெரியமுற்ற வெளியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு இரா சம்பந்தன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

கூட்ட ஆரம்பத்தில் வேட்பாளர்களைத் திருகோணமலை மாவட்ட சபைத் தலைவர் திரு அ. தங்கத்துரை அறிமுகம் செய்துவைத்தார்.

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''திருகோணமலையில் சீனன்வாடியில் உள்ள எண்ணெய்க் குதங்களை வல்லரசுகளுக்கு வழங்கும் திட்டத்தை திருகோணமலை உறுப்பினர் திரு இரா சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கண்டித்துப் பேசினார். இவற்றை வல்லரசுகளுக்கு வழங்கி இலங்கை மக்களை ஒரு பேரழிவுச் சிக்கலைத்து அதன் விளைவுகளுக்குப் பலியாகும் நிலையை உருவாக்கலாகாது என்பது தமிழர் கூட்டணியின் நிலையாகும் இவற்றை அணிசேரா நாடொன்று பொறுப்பேற்பது வேறுவிஷயம்''

சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவந்த குற்றவியல் நீதிச்சட்டம் மனிதாபிமானம் அற்றது என்று ரத்துச் செய்த யூ என். பி அரசு அதனிலும் கொடிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உருவாக்கி இளைஞர்கள், மதகுருமார்கூடத் துன்புறுத்தப்படுகின்றார்கள். (உ)

---

# வடக்கில் 'வாசுதேவ'

[வண்ணார்பண்ணை]

இன்றும் நாளையும் நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றவிருக்கின்றார்

நவசமசமாஜக் கட்சியின் ஆதரவுடன் போட்டியிடும் அபேட்சகர்களை ஆதரிக்கும் முகமாக நடைபெறும் கூட்டங்களிலேயே இவர் 7ம், 8ம் திகதிகளில் உரையாற்றுவார்.

---

# சனநெரிசலில் சங்கிலி மறைவு

[மாவிட்டபுரம்]

தேர்த்திருவிழா பார்க்கச் சென்ற பெண்மணியொருவர் சன நெரிசலில் தமது 4 பவுண் தங்கச்சங்கிலியை இழந்தார்

சங்கானையைச் சேர்ந்த சுப்பிரமணியம் தங்கேஸ்வரி என்னும் 50 வயதுப் பெண்மணி சீரணி நாகம்மாள் கோவிலுக்குத் தேர்த்திருவிழாவுக்கு சென்றிருந்த சமயம் சனநெரிசலில் இவரது கழுத்திலிருந்த 4 பவுண் தங்கச்சங்கிலி காணாமல்போய்விட்டது இது பற்றி மேற்படி பெண்மணி காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார். (உ)

---

# பிரிட்டிஷ் தூதரக அதிகாரி யாழ். விஜயம்

(வண்ணார்பண்ணை)

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவரின் இரண்டாவது செயலாளர் திரு டிமக் டிரமோட் நேற்று வெள்ளிக்கிழமை காலை யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்து உரையாடினார் அபிவிருத்தி சபைத் தலைவரையும் இவர் தனியாகச் சந்தித்து உரையாடினார். இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் மேற்றிராணியாரையும் இவர் சந்தித்து பேசவுள்ளார் இரண்டு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள இவர் யாழ் நகரின் பலஇடங்களையும் சுற்றிப்பார்வையிட்டு வருகிறார்.

---

# பாகிஸ்தானில் தேர்தல்

இஸ்லாமபாத் மே 6

பாகிஸ்தானில் விதேசார அடிப்படையில் தேர்தல் நடத்தப்படுவதை நான் விரும்புவதாக அந்நாட்டு ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்ஹக் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார். (வெ)

---

# இந்திய பனம் பொருள் நிபுணர் சம்பந்தன் ஆறுமாதம் இங்கு பணியாற்றுவார்

[வண்ணார்பண்ணை]

இந்திய பனம் பொருள் நிபுணரும் தமிழ்நாடுமாநில அரசு பனை வெல்லம் மற்றும் பனம்பொருள் விற்பனைக் கூட்டுறவு இணைச்சிறப்பு அலுவலருமான டாக்டர் கே.சம்பந்தம் நேற்று வெள்ளிக்கிழமை இலங்கையிலான தனது கடமைகளை மேற்கொண்டார் ஆறுமாத காலம் இலங்கையில் பனை அபிவிருத்தி தொடர்பான ஆலோசகராக கடமையாற்ற வந்துள்ள டாக்டர் சம்பந்தம் பனை அபிவிருத்திச் சபையில் கடமையாற்றுவார். பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரையின் வேண்டுதல் பிரகாரம் தமிழ்நாடு அரசு டாக்டர் சம்பந்தத்தை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது. உலக உணவு விவசாய நிறுவன உதவியுடன் பிரதேச அபிவிருத்தி அமைச்சு இவரை ஆலோசகராகக் கடமையாற்ற அழைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடந்த பனைவள தொழிற்பாட்டு மாநாட்டில் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட திரு சம்பந்தம் பனைத்தொழில் தொடர்பாக சில தடவைகள் இலங்கைக்கு வந்துள்ளார்,

பனைத் தொழில் தொடர்பான 12 புத்தகங்களை இவர் எழுதியுள்ளார்,

பனை உணவு, பனம்துப்பு கைப்பணிப் பொருட்கள் போன்ற அபிவிருத்திகளில் இவர் ஆலோசகராகக் கடமையாற்றுவார்

இது தொடர்பான ஒரு மாநாடொன்றையும் டாக்டர் சம்பந்தம் வெள்ளிக்கிழமை கூட்டினார்.

---

# அரச பதவி வெற்றிடங்கள்

## உதவி சுவடி காப்பாளர் பதவி

தேசிய சுவடிக்கூடத்திணைக்களத்தில் உதவி சுவடிகாப்பாளர் பதவி ஒன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி 30 வயதுக்கு மேற்பட்டவராயும் பல்கலைக்கழகத்தில் சரித்திரம், சமூகவியல், சட்டம் என்பனவற்றில் குறைந்தது இரண்டாந்தரச் சித்திபெற்றிருக்க வேண்டும். ஆங்கிலமொழியில் சிறப்பு பெற்றிருக்கவேண்டும். விண்ணபிக்க கடைசித்திகதி மே மாதம் 31ம் திகதி ஆகும். விபரங்களுக்கு ஏப்ரல் 22ம் திகதி வர்த்தமானி பார்க்கவும்.

## தொழில்நுட்ப விரிவுரையாளர் பதவி

உயர்கல்வி அமைச்சின் கீழ் உள்ள பல்தொழில்நுட்ப நிறுவனங்களில் பின்வரும் துறைகளில் விரிவுரையாளர்தரம் II க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) பொருளியல்
(2) விவசாயம்
(3) கணிதம்
(4) இரசாயனம்
(5) பொறிமுறை எந்திரவியல்
(6) குடிசார் எந்திரவியல்
(7) மின்சார எந்திரவியல்
(8) ஆளவையியலும். மட்டம் பார்த்தலும்

விண்ணப்பதாரி பல்கலைக்கழகம் ஒன்றில் 3 வருடம் கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்கவேண்டும சிங்கள/தமிழ் மொழியில் வேலைசெய்யும் ஆற்றல் இருக்கவேண்டும். வயதெல்லை 25தொடக்கம் 40 வயது வரையாகும், விண்ணப்பிக்க கடைசித்திகதி வருகிற மே 23ம் திகதியாகும். விபரங்களுக்கு ஏப்ரல் 22ம் திகதி வர்த்தமானி பார்க்கவும்.

---

# ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | இன்றைய நிகழ்ச்சிகள் |
| 6-01 | ஆங்கில நிகழ்ச்சி |
| 6-15 | விளையாட்டு நிகழ்ச்சி |
| 6-30 | முதலுதவி நிகழ்ச்சி |
| 6-45 | ஆங்கிலம் கற்பித்தல் நிகழ்ச்சி |
| 7-00 | செய்தி மஞ்சரி [தமிழ்] |
| 7-14 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 7-15 | இலங்கை அழகு ராணி [1983] |
| 8-15 | செய்தி மஞ்சரி [சிங்களம்] |
| 8-30 | சிங்கள நிகழ்ச்சி |
| 9-00 | '9வது ஆசியாட்' பந்தயம் |
| 9-30 | செய்தி மஞ்சரி [ஆங்கிலம்] |
| 9-45 | '9வது ஆசியாட்' பந்தய தொடர்ச்சி |
| 10-15 | ஒளிபரப்பு முடிவு |

---

# ரோமில் இடம்பெறும் திருநிலைப்படுத்தும் வைபவம்



அதி வண பிதா கிங்ஸ்லி சுவாமிபிள்ளை அடிகள் புதிய மட்டுநகர்-திருமலை மேற்றிராணியாராக இன்று சனிக்கிழமை ரோமாபுரியில் திருநிலைப்படுத்தப்படுகின்றார்.

காவலூரில் பிறந்த வண பிதா கிங்ஸ்லி தமது ஆரம்பக் கல்வியை காவலூர் புனித அந்தோனியார் ஆண்கள்பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். யாழ் புனித மாட்டீனார் குருமடம், கண்டி தேசிய குருமடம் ஆகியவற்றில் குருத்துவத்தையும் கற்று. ரோமாபுரியிலும் சிலகாலம் கற்று அங்கேயே குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். நாடுதிரும்பி யாழ் மறைமாவட்டத்தில் சிலபங்குகளில் பங்குக்குருவாகவும் கடமையாற்றினார் பின்பு யாழ். மேற்றிராசன செயலாளராகவும், தேசிய மறை பரப்பு இயக்குனராகவும் கடமையாற்றுபோது புதியபதவி கிடைத்தது. கிங்ஸ்லி சுவாமி என எல்லோராலும் அழைக்கப்படும் இவர் ஆனைப்பாறிய ஆசிரியர் சுவாம்பிள்ளை அவர்களின் கனிஷ்ட புத்திரராவர் 46 வயதான புதிய ஆயர் அவர்கள் தமது மறைமாவட்டத்தை நன்கு ஆட்சி செய்ய இறைவன் அருள்புரியவேண்டும்.

எம். றூபன்

---

# எழுவைதீவுக்கு குடிநீர்!

[வண்ணார்பண்ணை]

எழுவைதீவுக் கிராமத்திற்கும் இம்முறை குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரின் சிபார்சின் பேரில் எழுவைதீவுக் கிராமத்திற்கு முதன்முறையாக இவ்வருடம் குடிநீர் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த சுருவில், நாரந்தனை போன்ற கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக உதவி அரசாங்க அதிபர் திரு. கி. பாலரத்தினம் தெரிவித்தார். (க)

---

# இலக்கண...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ளர். சுவாமிகளைத் தரிசிக்கும் பேறு எமக்கும் ஒருமுறை கிடைத்தது.

சுவாமிகள் முன்னெக்காலத்தும் வெளிவராதிருந்த சிவஞானமாபாடியத்தையும் சிவாக்கிரபாடியத்தையும் இவைபோன்ற சில அரிய நூல்களையும் தமது காருண்ய சித்தையோடு கூடிய விடாமுயற்சியால் மூலப் பிரதிகளை அறிந்து பெற்றுப் பரிசோதித்து அச்சிட்டுச் சைவ உலகிற்குப் பெரும் பயனைச் செய்தார்கள். முத்திநிச்சய பாடியமென்னும் அரிய நூல் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவந்தமைக்குச் சுவாமிகளும் காரணமாயுள்ளார். தருமபுர ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ மாசந்நிதானமவர்கள் சுவாமிகளைப் பலமுறையும் அபிமானித்து வந்தார்கள். ஞானாவரண விளக்கம் என்னும் நூலைச் சுவாமிகள் வெளியிடும் வண்ணம் ஆராய்ச்சி செய்து வரும்போது முத்தியடைந்தார்கள்.

யாழ். ப. நோ.கூ. சங்க

## ஊழியர்தொழிற்சங்கம் - இயக்குநர் சபை எடுத்துள்ள முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் சமர்ப்பித்த 8 கோரிக்கைகளில் 7 கோரிக்கைகளை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொண்டதால், பொது வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

யாழ் ப.நோ கூ.சங்க மண்டபத்தில் நிர்வாகத்தினரும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இம்மாதம் 2ம் திகதி காலை சந்தித்து கோரிக்கைகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இக்கூட்டத்தில் சங்க உபதலைவர் திரு. தே. பி. அருளானந்தம், இயக்குநர் திரு செ. அருளம்பலம், கூட்டுறவுத் தொழிற்சங்கப் பொருளாளர் திரு த தவராசா, தொழிற் சங்கப்பொதுச்செயலாளர்திரு. நா த. இராசதுரை, நிர்வாகச் செயலாளர் திரு வி எஸ். குணலிங்கம், பொருளாளர் திரு. ஏ எம். ஜெ புவனேஸ்வரன், செயலாளர் திரு இரா. லோகநாதன், கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்த திருவாளர் கள் பி.ஏ ஜி திருராஜா, வே. சிவசுப்பிரமணியம், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க நிர்வாக உறுப்பினர்கள் திருவாளர்கள் பி வி பாலேந்திரா, ப. அன்ரனி, சங்க இயக்குநர்கள் திருவாளர்கள் பெ யே கப், தா. அமிர்தநாதர், சங்க பதில் பொதுமுகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க யாழ். கிளையினால் இவ்வருடம் மார்ச் மாதம் 29ம் திகதி அனுப்பப்பட்ட கடிதம் ஆராயப்பட்டது.

இக்கடிதம் இம்மாதம் 2-ம் திகதி கூடிய நிர்வாகத்தினர், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஆராயப்பட்டு கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டது.

கடிதத்திலுள்ள கோரிக்கையில் 2வது விடயமான 16 லட்சம் உணவு முத்திரை சம்பந்தமாக கூட்டுறவு உதவி ஆணையாளருடன் தொடர்பு கொள்வதெனவும், மேற்படி விடயம் சம்பந்தமாக ஒழுக்காற்று விசாரணை ஒன்று நடைபெறும்பொழுது, இவ்விடயத்தை இரகசியப் பொலிசாரிடம் விசாரணைக்கு விடலாமா என்பதை ஆராய்ந்து அவர் இதற்கு உடன்படும்பட்சத்தில் இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்து சம்பள உயர்வு பற்றி ஆராயப்பட்டு, முதலாவதாக அதிகரிக்கப்பட்ட ரூ 140/- ஜூன் மாதம் 1983லிருந்து கொடுப்பதெனவும், ஜூன் மாத சம்பள உயர்வு 1983 டிசம்பரில் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

17-6-81 திகதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டபடி தற்காலிக ஊழியரை நிரந்தரமாக்கப்பற்றிய விடயம் நடைமுறைப் படுத்தப்படும்.

மூ வருடத்திற்கு மேல் வேலைசெய்யும் தற்காலிக ஊழியர்கள் அவர்கள் தொடர்ந்து வகிக்கும் பதவியில் நிரந்தரமாக்கப்படுவர். அவர்தம் வேலைபற்றி நிர்வாகம் ஆராய்ந்து சிபார்சுசெய்யும்.

ஊழியர்கள் கொடுப்பனவு பற்றிய விபரப் பட்டியல் ஒன்றைத் தொழிற்சங்கம் நிர்வாகத்திடம் ஒப்படைக்கும். இது ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சேவை மூப்பின்படி பதவி வழங்க நடவடிக்கை எடுக்கப் படும்.

கடிதத்தில் கண்டுள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்பட முடியாதபட்சத்தில் சங்கத்தைக் கூட்டுறவு இலாகாவிடம் ஒப்படைக்கக் கோரும் எட்டாவது கோரிக்கை அவசியமில்லாததால் கைவிடப்பட்டது [க]

---

ரூ. 40 லட்சம் பெறுமதியான

## தொழில்நுட்பக் கருவிகள் ஜப்பான் வழங்கும்

[கொழும்பு]
ஜப்பானிய அரசாங்கம் அதன் தொழில் நுட்ப ஒத்துழைப்புத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 40 லட்சம் ரூபா பெறுமதியான தொழில் நுட்பக் கருவிகளை அன்பளிப்பாக வழங் யுள்ளது.

உயர் கல்வி அமைச்சில் இடம்பெற்ற சாதாரண வைபவம் ஒன்றில் இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதரக ஆலோசகர் திரு. வை. மோட்டோமுற பிரதி உயர் கல்வி அமைச்சர் திரு. ஏ, ஆர். எம், பி. அத்தநாயக்காவிடம் மேற்படி பொருட்களைக் கையளித்தார்.

இருதொகுதிகளைக்கொண்ட மேற்படி சாதனங்களில் ஒரு தொகுதி மருதானை, இரத்மலானை தொழில் நுட்பக் கல்லூரிகளிலிக் வ ஜெலி, இலத்திரனியக் கல்விப் போதனைக்கும் மற்றைய தொகுதி பதுளை தொழில் நுட்பக்கல்லூரியில் உலோக வேலைகள் கல்விப் போதனைக்கும் பயன்படுத்தப் படும்,

---

## பட்டப் பகலில் யன்னல் உடைத்து ரூ. 15,000 திருட்டு!

[கோண்டாவில்]
பட்டப்பகல் நேரத்தில் யன்னலை உடைத்து உட்புகுந்த திருடர் சுமார் 15,000 ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளனர். இச் சம்பவம் முன்தினம் நண்பகல் கொக்குவில் அச்சுக்கூடவீதியில் உள்ள ஒருவரின் வீட்டில் நடைபெற்றுள்ளது

கணவர் மனைவி ஆகிய இருவரும் அலுவலகத்திற்கு சென்றிருந்தபொழுது வீட்டு யன்னல் கம்பியை வேறு கம்பியினால் உடைத்து திருடர்கள் உட்புகுந்துள்ளார்கள்

அலுமாரியில் இருந்த சுமார் ஆறுபவுண் வரை மதிப்புள்ள சங்கிலி காப்பு, மோதிரம் என்பவற்றை திருடியதுடன் ரேப் ரெக்கோடர் ஒன்றையும் மற்றும் துணிகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிசார் விசாரணையை மேற்கொண்டுள்ளார்கள். [க]

---

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 24-ம் திகதி
சனிக்கிழமை
(7-5-83)

மேடம்: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும் கண் அடைப்பு வேலை நடக்கும் பெரியோரைப் பகைத்துக் கொள்ள நேரிடும் மற்றவர்களிடம் பொல்லாங்கு கேட்க நேரிடும் பொறுமை நன்று.

இடபம்: பிரிந்தவர் வாழ்க்கையில் இணைவர் குடும்பப் பிரச்சினைகளில் சுமுகமான நிலை தென்படும் சுற்றுடலில் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்கும் பெருகும் வாகனம் கொள்முதல் செய்ய உகந்த நாள்

மிதுனம்: செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும் வழக்கு விவகாரங்களில் வெற்றி உண்டு வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியைத் தேடித்தரும் செய்தியும் கிடைக்கும் புத்திர வழியால் நன்மையுண்டு

கடகம்: உற்வாடிக்கெடுப்பதற்கு பணியாளிகள் முன்வருவார்கள் பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும் சிலருக்கு உஷ்ண ரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

சிங்கம்: வெற்றி உமது அருகில் விரைந்து வரும் எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு வருவார்கள் ஸ்திரமுறிவால் நன்மைகள் வந்து சேரும் காதலர்களுக்கு கனிவான எண்ணம் தொடரும்.

கன்னி: எக்காரியத்தையும் எண்ணித்துணிக அவசர போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக் கூடும் வணிகர்களாயில் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

துலாம்: விந்தையில்வெற்றி காணும் வேண்டியது கிடைக்கும் பொது மக்களின் தொடர்புடன் புகழ் குவியும் மெத்தவும் பொருள் சேரும் வேலிடத்து ஆதரவு பெருகும் திதிக்கும் செய்தியுடன் தேனான வாழ்வுண்டு.

விருச்சிகம்: அறிஞர்களின் சந்திப்பு இன்று நிகழும் அறவழியில் ஆர்வம் பிறக்கும் ஆக்கப்பணியில் ஈடுபடுவீர் சொந்தமாகத் தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும் எதிலும் முன்னணியில் நிற்பீர்கள்

தனு: பொதுத் துறையில் நாட்டம் பிறக்கும் மக்களின் ஆதரவு கிடைக்கும் அரசியல் வாதிகளுக்கு செல்வாக்குப் பெருகும் பொருளாதார நிலை சீரடையும் பிள்ளை ஒன்றின் கல்வி முன்னேற்றமுண்டு.

மகரம்: நெஞ்சமும் புண்ணும் நெடுமூச்சும் வெளிக்களம்பும் தொழிலில் தொல்லைகள் தோன்றும் உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும் பண விவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம்,

கும்பம்: குமுறும்நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள் எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும் பிரயாணத்தைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது சிலர் புண்பட்டதுரைகளால் மனது புண்படும்.

மீனம்: ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள் பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் தாய் வழி மூலம் நற்செய்தி கிடைக்கலாம்.

சோதிடக் கலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை

---

### துறைமுக அபிவிருத்தி

(திருகோணமலை)
திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக உலக வங்கியின் வாஷிங்டன் பிரதிநிதியாக விளங்கும் திரு ஒகமாய் திருகோணமலைக்கு அண்மையில் விஜயம் செய்தார். இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் முகாமையாளர் திரு. டி ஜி. கெமுனுவுடன் திரு. ஒகுமாய் இத் துறைமுகத்தைச் சுற்றிப் பார்வையிட்டார்.

---

### திருவிழா

(சரவணை)
ஊர்காவற்றுறையைச் சேர்ந்த புளியங்கூடல் இந்தன் பதி ஸ்ரீவிநாயகர் ஆலய வருடாந்த திருவிழா இம் மாதம் 3ம் திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 11ந் திகதி தேர்த் திருவிழாவும் மறுதினம் தீர்த்த உற்சவமும் நடைபெறும். [அ]

---

சின்னத்தீவு வாடியில்

## 5 லட்சம் பெறுமதியான பொருட்கள் தீக்கிரை

(சுழிபுரம்)
ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் உட்பட ரொக்கப்பணமாக ரூபா 30,000 தீக்கிரையாகின.

காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த திரு.ஆ.மகாலிங்கம் ஜே. பி. என்பவருக்குச் சொந்தமான இரணதீவு மேற்கிலுள்ள சின்னத்தீவில் வாடியில இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

வாடியில் எரிந்துகொண்டிருந்த தேங்காய் எண்ணெய்விளக்கில் இருந்து தற்செயலாக ஏற்பட்ட தீயினால்தான் இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இரவு பத்து மணியளவில் தீப்பற்றிக்கொண்டதாகவும் உடன் தீயை அணைக்க முடியாததால்தான் தீ எங்கும் பரவியதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாடியும் பொருட்களும் முற்றாக எரிந்துவிட்டன. ரொக்கம் ரூபா முப்பதாயிரம், டீசல் மூன்று பரல், 32 மூடை அரிசி, சீனி 8மூடை, 9 மோட்டார்கள், யந்திர சாதனங்கள், வலைகள், மற்றும் பல பொருட்கள் இவற்றில் அடங்கும்.

நஷ்டம் சம்பந்தமாக இரணைதீவு உதவிஅரசாங்கஅதிபரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ம)

---

### இலங்கையில் கலாச்சாரப் பேட்டை

(கொழும்பு)
இலங்கையில் கலாச்சாரப் பேட்டைபொன்றை அமைப்பதுபற்றி சீனு ஆராய்ந்துவருகிறது. கலாச்சார அமைச்சர் திரு ஈ எல். பி, ஹுருல்லேயின் வேண்டுகோளையடுத்தே சீனு இதுதொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது,

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தை அமைக்க சீனு உதவியதுபோல் கொழும்பில் பல கலைக்கூடங்களை அமைக்கவும் சீனு உதவவுள்ளது. (வ)

---

கொள்ளை - வழிப்பறிகுற்றவாளிகளை

## மேல் நீதிமன்றங்களின் முன்நிறுத்த ஆலோசனை

[கொழும்பு]
ஆயுத முனையில் கொள்ளையடித்தல், வழிப்பறிக்கொள்ளை ஆகியவற்றில் ஈடுபடும் பயங்கர குற்றவாளிகளை மேல்நீதிமன்றங்களின் முன் நிறுத்தி விசாரணை நடத்துவது குறித்து பொலிஸ் பகுதியினர் ஆலோசனை நடத்திவருவதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை மாஜிஸ்ரேட் நீதிமன்றங்கள் முன் நிறுத்தப்பட்டு நிமாண்டில் வைக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு எதிராக மேல்நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம் பயங்கர குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

தற்போது வெலிக்கடை, போகம்பரை, யாழ்ப்பாணம் ஆகிய சிறைச்சாலைகளில் மேற்படி குற்றங்களுடன் தொடர்புள்ள சுமார். 400 கைதிகள் இருக்கின்றனர் என்றும் மேலும் நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகள் மத்தியிலும் இதுகுறித்துஆய்வு நடத்தப்பட இருப்பதாகவும் அவர் கூறினர்.

---

### இன்று குருபூசை

[சரவணை]
சரவணை தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுதசுவாமி ஆலயத்தில் இன்று சனிக்கிழமை அப்பர் சுவாமிகள் குருபூசை அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

சரவணை தேவபுரம் சைவ இளைஞர் மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவில் நண்பகல் அன்னதானம் நடைபெறும்.

புங்குடுதீவு பாணவிடைச் சிவாலயத்திலும் அப்பர் குருபூசை அதிசிறப்பாக நடைபெற தர்மகர்த்தா சபை ஏற்பாடு செய்துள்ளது. (அ)

---

## “சமயங்கள் யாவும் ஒன்றையே போதிக்கின்றன”

[மாவிட்டபுரம்]
“சமயங்கள்யாவும் ஒன்றையே போதிக்கின்றன. ஆகவே சமய பேதங்களைப் பாராட்டாது ஒவ்வொரு சமயத்தவரும் ஏனைய சமயத்தவரை மதித்து நடக்கவேண்டும். இந்த பண்பை கல்விக்கூடங்கள் வளர்க்கவேண்டும். அதைவிடுத்து சமயபேதத்திற்கு வித்திடும் இடங்களாக கல்விக்கூடங்களை மாற்றமுனைவது கண்டிக்கப்பட வேண்டியதாகும்”.

இவ்வாறு மயிலிட்டி றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலய அதிபராகவிருந்த சங். சகோதரி எம். சவெறின் இடமாற்றம் பெற்றுச்செல்வதை யொட்டி வித்தியாலயத்தில் இடம்பெற்ற சேவைநலம் பாராட்டு விழாவிலும் பிரிவுபசாரவிழாவிலும் கலந்துரையாற்றிய அபிவிருத்திச் சபை காங்கேசன் துறை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. க, சண்முகநாதன் கூறினார்.

வண. எம். தேவராஜன் அடிகள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மேற்படி அதிபரின் சேவையைபலரும் பாராட்டிப்பேசினர்.

மேற்படி வித்தியாலயத்தில் புதிய விஞ்ஞான கூடம், புதிய மண்டபம், அதிபர் அலுவலகம், குடிநீர்வசதி, விளையாட்டு மைதானம் என்பவற்றை அமைக்க இவர் எடுத்த முயற்சியை பாராட்டியதுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன.

பெற்றோர் ஆசிரியர் சங்கசெயலாளர் திரு. எம். மரியதாஸ் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர்.

இறுதியாக தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு சங். சகோதரி எம்.சவெறின் நன்றி தெரிவித்தார்.

மேற்படி அதிபரின் இடமாற்றத்தையடுத்து இவ்வித்தியாலய புதிய அதிபராக சங். சகோதரி எஸ். விஜே நியமிக்கப்பட்டுள்ளார். (க)

## சைவப்பெரியார் சபையின் விசேட கூட்டம்

(சுழிபுரம்)

சைவப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழாச் சபையினரின் விசேட கூட்டம் இன்று சனிக்கிழமை காலை சபைச் செயலாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. சைவப்பெரியார் எழுதிய சைவபோதம் முதலாம், இரண்டாம் பாகங்கள் அச்சிட ரூபா 17000.00 திரட்டுவது சம்பந்தமான நடவடிக்கை உடன் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைக் கணக்காளர் எ. சோமசுந்தரம்பிள்ளை (செயலாளர்) கவனித்து வருகின்றார்.

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள் 10-30, 2-15, 4-45, 7-00, 9-30
CALIFORNIA DOLLS
9-5-83 முதல் நெஞ்சத்தைக் கிள்ளாதே

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை

லிடோ (யாழ். நகர்) 10-30, 2-15, 4-45, 7-15, 9-30.
Mac Arther

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30 (யாழ். நகர்)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
திருடாதே
(புதிய பிரதி)

சாந்தி தினசரி 5 காட்சிகள் (யாழ். நகர்) 7 — 12 மட்டும்
Staring the Big Four :
JIM BROWN—FRED WILLIAMSON—JIM KELLY —RICHARD ROUND TREE in
"ONE DOWN TWO TO GO"
13-5-83—சிவாஜி—"தியாகம்"—கலர்

வின்ஸர் தினசரி இன்னும் சில தினங்கள் மட்டும் (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சரிதா- சில்க் ஸ்மிதா-சுருளிராஜன்
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)
அடுத்த வெளியீடு IDEAL MARRIAGE

மனோகரா தினசரி 4 காட்சிகள்
• (யாழ் நகர்)
கமலஹாசன் - ஜெய்சங்கர் - ஸ்ரீதேவி
நடித்த
வாழ்வே மாயம்
(ஈஸ்ட்மன் கலர்)

## ஈஸ்வராம்பா தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரீசத்திய சாயி சேவா சமிதி மாணவ, மாணவிகளின் ஈஸ்வராம்பா தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை திருநெல்வேலி சேர் பொன். இராமநாதன் வீதியிலுள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பேராசிரியர் கா. இந்திரபாலா சிறப்புரையாற்றுவார். நாட்டிய நாடகம் உட்பட பல கலைநிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. [வெ]

## வெற்றி பெற்ற கழகங்கள்

(கரவெட்டி)

கரவெட்டி மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையம் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் பின்வரும் கழகங்கள் வெற்றி பெற்றன.

கரபந்தாட்டப் போட்டியில் நாலு பேர் கொண்ட குழுவில் இமையாணன் விளையாட்டுக்கழகம் முதலிடத்தையும் செங்கதிரோன் விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தையும் பெற்றன.

6 பேர் கொண்ட குழுவில் கரவெட்டி ஸ்போர்ஸ் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் வளர்மதி விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

உதைபந்தாட்டப் போட்டியில் வளர்மதி விளையாட்டுக்கழகம் முதலிடத்தையும் கரவை ஒன்றியம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு கரவெட்டி மேற்குகிராமோதய சபைத் தலைவர் திரு. எஸ். வீரசிங்கம் அண்மையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவின் போது பரிசில்களை வழங்கினார்.

ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
எல்லாமே
பணத்துக்குத்தாண்டா

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி- 4-10 7-00
சனி. ஞாயிறு 1-30
லவகுசா

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - சாவித்திரி
வேட்டைக்காரன்

## யாழ். மாநகரசபை காங்கிரஸ் வேட்பாளருக்கு புலிப்படைஇராணுவம்கடிதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் ஒருவருக்குப் புலிப்படை இராணுவத்தின் கடிதம் தபாலில் கிடைத்துள்ளது.

தேசத்துரோகிகளின் கவனத்திற்கு என்று தலைப்பிட்டு 'புலிப்படை இராணுவம்' என்ற புலிச்சின்னத்துடன் அனுப்பப்பட்டுள்ள இக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

காங்கிரஸ் வேட்பாளரின் கவனத்திற்கு நீர் இந்த மாநகரசபை தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட வேண்டாம்.

நாம் இனிப் பேசமாட்டோம் துப்பாக்கிதான் பேசும் அண்மையில் நடந்த செய்தி கேள்விப்பட்டிருப்பீர், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறையில் யூ என் பி. க்கு நடந்த செய்தி கேள்விப்பட்டிருப்பீர். இதனைக் கவனத்திற்கு எடுத்து 24 மணி அவகாசத்தில் உமது வேட்பாளர் பட்டியலிலிருந்து விலக வேண்டும். உமக்குமட்டுமல்ல யூ. என். பி, காங்கிரஸ் வேட்பாளருக்கும் வெகுவிரைவில் பதில்வரும். இதைக் கவனத்தில்கொள்ளவும்- புலிப்படை இராணுவம்.

## நடப்புவருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் வழிபடுவோர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் ஊரெழு மாதர் சங்கக் கட்டிடத்தில் திரு வ. இ. இரவீந்திரசோதி தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வ. இ. இரவீந்திரசோதி, உபதலைவர்: க. முத்துக்குமாரசாமி, செயலாளர்: க. கனகசுந்தரம், பொருளாளர்: து சிவசுந்தரம்.

பதினொரு பேர் கொண்ட நிர்வாகசபையும், இளைஞர் தொண்டர் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## சிறந்த அணியாக தெரிவு

(கரவெட்டி)

உடுப்பிட்டி வடக்கு இமையாணன் ஜோதி சனசமூக நிலையம் நடாத்திய மென்பந்து கிரிக்கெற் போட்டியில் சிறந்த அணியாக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் தெரிவு செய்யப்பட்டது.

சிறந்த துடுப்படி வீரராக எஸ். மனோகரனும் (பரு. ஐக்கிய விளையாட்டுக் கழகம்) சிறந்த பந்துவீச்சாளராக எஸ் வசந்தகுமாரும் (கரணவாய் ஸ்ரைக்கேர்ஸ்) சிறந்த பந்துதடுப்பாளராக எம் ஜெயபாலும் (பரு ஐக்கிய விளையாட்டுக்கழகம்) தெரிவாயினர்.

இப் போட்டியின் சிறந்த வீரராக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ். மனோகரன் தெரிவு செய்யப்பட்டார்.

(க)

## பொலிசாருக்கு பிரசுரம்

(மாவிட்டபுரம்)

ஐ. தே. க. வேட்பாளர்களின் கொலைக்கு நாமே காரணம் என உரிமை கோரித் தமிழீழ விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்ட பிரசுரம் காங்கேசன்துறைப் பொலிசார் சிலருக்கு தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. நீள என்வலப்பில் வைத்து பொலிசாரின் விலாசம் எழுதப்பட்ட மேற்படி துண்டுபிரசுரம் அடங்கிய கடிதம் காங்கேசன்துறைத் தபால் நிலையத்திலேயே சில பொறிக்கப்பட்டுள்ளதாம்.

## லொறி விபத்தில் 4 பேர் படுகாயம்

(வண்ணார்பண்ணை)

பனை அபிவிருத்திச்சபைக்குச் சொந்தமான லொறியொன்று வியாழக்கிழமை இரவு விபத்தில் சிக்கியதால் சாரதி உட்பட இருவர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

கோண்டாவிலில் நடந்த இந்த லொறி விபத்தில் லொறிச்சாரதி திரு. சி. மகேஸ்வரலிங்கம், சிறப்பனை உதவி உத்தியோகத்தர் திரு எஸ் புவனேஸ்வரமூர்த்தி ஆகிய இருவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொருட்களுடன் கொழும்பு செல்லவிருந்த ஆபத்தமான இந்த லொறி இணுவிலுக்குச் சென்று கொண்டிருந்த சமயம் இவ்விபத்து நடந்தது. விபத்து நடந்த பகுதியில் உள்ள பொதுமக்களின் உதவியுடன் இவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர், முன்னால் வந்த வாகனம் ஒன்றிற்கு விலகிச் சென்றபோது வீதி ஓரத்தில் நின்ற கம்பத்துடன் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

4-வது ஜனத்திரள் வாரம்



தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
றீகல்
ஏமாற்றத்தைத் தவிர்க்க முன்கூட்டியே வரவும்
'நடிகர் திலகம்'
சிவாஜி கணேசன்
புதுமுகமாக அறிமுகமாகும் சிவாஜி வாரிசு
'பிரபு
சுந்தரராஜன்
ஸ்ரீப்பிரியா
சுமித்திரா
மனோரமா
நடிக்கும்
சங்கிலி
(ஈஸ்ட்மென் கலர்)

வெளியூர் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க திரைப்படக் கூட்டுத்தாபன அனுமதியுடன் இன்னும் சில தினங்கள் மட்டும் சங்கிலி நீடிக்கப்பட்டிருக்கின்றது.

## ஈச்சமோட்டை இளைஞர் வி. க. வெற்றி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மூத்தவிநாயகர் விளையாட்டுக்கழக 'பி' பிரிவிற்கும், ஈச்சமோட்டை இளைஞர் விளையாட்டுக்கழகம் 'பி' பிரிவிற்கும் இடையில் அண்ணமலை விளையாட்டரங்கில் நடந்த சிநேகபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் ஈச்சமோட்டை இளைஞர் வி. க. வெற்றியீட்டியது.

மூத்தவிநாயகர் வி. க. கோஷ்டிக்கு செல்வன் அருட்குமரனும் ஈச்சமோட்டை இளைஞர் கோஷ்டிக்கு செல்வன் கந்தையா கமலும் தலைமை தாங்கி ஆடினர்.

காப்டன் டி ஏ. எம். குணசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [அ]

## சக்கரங்கள் திருட்டு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைச் சீமெந்து ஆலை வேலைத்தளத்தில் நின்ற வாகனத்திலிருந்து இரண்டு சக்கரங்களை இனந்தெரியாதவர்கள் திருடிச்சென்றுவிட்டனர்.

காங்கேசன்துறை சீமெந்து ஆலை 3-ம் கட்டப்பிரிவு வேலைத்தளத்தில் நின்ற சீமெந்துக்கலவை கொண்டு செல்லும் வாகனத்திலிருந்து 2000 ரூபா பெறுமதியான இரண்டு சக்கரங்களை இனந்தெரியாதவர்கள் திருடிச்சென்றுவிட்டதாக 3-ம் கட்ட வேலை மேற்பார்வையாளர் வேலாயுதப்பிள்ளை தம்பிஐயா காங்கேசன்துறைப் பொலிஸில் புகார்செய்துள்ளார்.

இது குறித்து காங்கேசன்துறைப்பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. சி ஐயாத்துரை தலைமையிலான பொலிஸ் கோஷ்டி விசாரணை மேற்கொண்டுள்ளது. [க]

# ஐ. தே. கட்சி வேட்பாளர் மேலும் மூவர் வாபஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபைத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிடும் முதல் வேட்பாளர் திரு எஸ். மனோகரன் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் நேற்றுக்கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபைத்தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக்கட்சியைச் மேலும் இரு வேட்பாளர் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

பதினொராவது வேட்பாளரான திரு பத்மநாதன் கிரிதரன் என்பவரும் 27வது வேட்பாளரான திரு எஸ், எஸ், இராசையா என்பவரும் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர், (மா)

## 'உமா மீதான விசாரணை

(சென்னை)

இன்மையில் சென்னை மேல் நீதிமன்றத்தில் பிணை மறுக்கப்பட்ட இலங்கையின் வடபகுதி தடைசெய்யப்பட்ட இயக்கத்தினை சேர்ந்தவரான உமா மகேஸ்வரன் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் யூலை மாதம் 14ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

சென்னையில் பிணையில் நின்ற பிரபாகரன், ராகவன் ஆகியோர் காணமல் போனதைத் தொடர்ந்து உமா மகேஸ்வரன், ஜோதீஸ்வரன், சிவனேஸ்வரன் ஆகியோரின் பிணை மறுக்கப்பட்டு நிமான்டில் வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-கு)

## வடக்கில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக்கொலை செய்யப்பட்டவர்.

**ஆறுதல்**

இவர்களின் இல்லங்களுக்குச்சென்ற அமைச்சர் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்கூறி ஜனாதிபதி நிதியிலிருந்து நிவாரண நிதியாக தலா ஒருலட்சம் ரூபா வழங்கவுள்ளதாகவும் மேலும் சகல உதவிகளும் வழங்க உத்தேசித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

திரு. இரத்தினசிங்கம் நூப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டபோது துப்பாக்கிச் சன்னம்பட்டு மோசமாகக் காயமடைந்த சாணவாய் வடக்கைச் சேர்ந்த தொழில்நுட்பவியலாளர் திரு முருகேச பரராசசிங்கத்தையும் அமைச்சர் பார்வையிட்டு ஆறுதல் கூறி ஒருலட்சம் ரூபா நிதி உதவி வழங்குவதாக கூறினார்.

காயமடைந்த பரராசசிங்கம் யாழ் ஆஸ்பத்திரியிலிருந்து சிகிச்சை பெற்றுவருகிறார்

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வரும் கோப்பாய் எம். பி திரு.ஆலாலசுந்தரத்தையும் அமைச்சர் சென்று பார்த்தார். (மா)

## யாழ். பல்கலைக் கழக

# மருத்துவபீட மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த சுமார் 250 மாணவர்கள். கட்டிட வசதியின்மை குறித்துநேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தி உண்ணாவிரதம் இருந்தார்கள்.

விரிவுரைகள் நடைபெறும் மண்டபம், பொது மண்டபம், நூல்நிலைய மண்டபம் போன்ற பலவசதிகள் இதுவரை காலமும் அமைத்துக்கொடுக்கப்படாமல் ஒப்பந்தகாரரும் நிர்வாகமும் காலங்கடத்திச் செல்வதையிட்டு இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலமும் உண்ணாவிரதமும் நடாத்தினர்.

மூன்றுமாடிகள் கொண்ட மருத்துவபீடக்கட்டிடத்தை, கட்டிக்கொடுப்பதற்குபொறுப்பேற்ற ஒப்பந்தகாரர், முதலாம் கட்டத்தைப் பூர்த்தி செய்துகொடுத்ததைத்தொடர்ந்து விரிவுரைகள் ஆரம்பமாகின

பின்னர் குறிப்பிட்டகாலத்துக்குள் மற்றைய இருமாடிகளையும் ஒப்பந்தகாரர் பூர்த்திசெய்துகொடுக்காததைத்தொடர்ந்து மாணவர்கள்இருதடவை வகுப்புகளை பகிஷ்கரித்திருந்தனர். (மா)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். திறந்தவெளி அரங்கில் இன்றிரவு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி மாளிர் நாடக மன்றத்தினரின் 'ஞானசவுந்தரி' நாட்டுக்கூத்து நடைபெறவுள்ளது.

## இலங்கை---

1-ம் பக்கத்தொடர்ச்சி)

புகாரைத் தொடர்ந்து இவர்கள் இவ்விதநடவடிக்கைக்குள்ளாக்கப்பட்டனர் (இ)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகலிங்கம் இராசம்மா

### இறைவனடி சேர்ந்தார்

இளர் காலம் சென்ற சித்தங்கேணி ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர் சின்னப்பு நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், அபயானந்தன், சற்குணானந்தன், சரவணபவானந்தன் ஆகியோரின் அருமைத்தாயாரும், திருமதிகள் மகேஸ்வரி, இந்திராணி, மகேஸ்வரி, ஆகியோரின் அன்பு மாமியாரும் காலம் சென்ற சிவசுப்பிரமணியம், டாக்டர் கனகரத்தினம், திருமதிகள் தம்பிராசா சிவபாக்கியம், பதஞ்சலிநாதன் நாகரத்தினம் ஆகியோரின் சகோதரியும் V K சபாரத்தினத்தின் மூத்த அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் யாழ்ப்பாணம் கந்தர்மடம், பலாலி வீதி 51-ம் இலக்கத்தில் இன்று 7 - 5 - 83 பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று யாழ். கோம்பயன் மணல் மயானத்தில் 4-30 மணிக்குத் தகனம் செய்யப்படும். 7146

## பிரதிவாதிகளுக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அபேவர்த்தனை, யாழ்ப்பாணம் கட்டணி பட்டியலிலுள்ள வேட்பாளர்கள் வல்வெட்டித்துறை கட்டணி பட்டியலிலுள்ள வேட்பாளர்கள், யாழ்ப்பாணம் ஐ. தே. க. முதல் வேட்பாளர் வல்வெட்டித்துறை ஐ. தே. க முதல் வேட்பாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக காட்டப்பட்டுள்ளனர்

மனுதார் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எச் எல், டி. சில்வா, சட்டத்தரணிகள் கே. கனகேஸ்வரன் எல். மகேந்திரன், ஆர். திலகன் கனகரத்தினம் ஆகியோர் ஆஜராஞர்கள். பிரதிவாதிகளில் ஒருவரான திரு ஏ அமிர்தலிங்கம் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வி. எஸ். ஏ. புள்ளநாயகம் ஆஜராஞர்.

தேர்தலை சட்டபூர்வமாக நடத்தும்படி தேர்தல் ஆணையாளர் உட்பட முதல் மூன்று பிரதிவாதிகளுக்கும் உத்தரவிடுமாறும் வாக்காளர் அட்டையில் தமிழர் விடுதலை கூட்டணி பெயரை பதிப்பதை தடைசெய்ய கட்டளையைப் பிறக்குமாறும் இம்மனுவிசாரணை முடியும் வரை மேற்படி பெயரை வாக்காளர் அட்டையில் பதிப்பதற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்குமாறும் கோருகிறேம்.

யாழ்ப்பாண மாநகர சபை தொடர்பான மனுவில் காங்கிரஸ் முதல் வேட்பாளர் எஸ் எஸ். மனோகரன் தமிழ்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) ஆகியோர் மனுதாரர்களாவர்.

வல்வெட்டித்துறை நகரசபை தொடர்பான மனுவில் காங்கிரஸ் முதல் வேட்பாளர் திரு மோதிலால் நேரு, திரு ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] ஆகியோர் மனுதாரர்களாவர்.

விசாரணை இம்மாதம் 11ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது [இ]

# மரண அறிவித்தல்

## சுப்பர் சின்னப்பு (செல்லர்)

காங்கேசன்துறை சீலன்ஸ் குடிவகை நிலைய உரிமையாளர் சுப்பர் சின்னப்பு (செல்லர்] காலமாகி விட்டார். இவர் நேசம்மாவின் அன்புக்கணவரும், அல்பிரெட் (மூளாய் அச்சேரி அருமைத்தந்தையும், திருமதி எலிசம் புஸ்பராணி அல்பிரெட்டின் மாமனாரும், சவரிமுத்து, காலம்சென்ற பாக்கியம் சுவாம்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், ஜெயசீலி, குணசீலி, வசந்தசீலி, ஞானசீலன், ஞானசீலி, காலம் சென்ற நிமால் ஜெயசீலன், பிரேமசீலி ஆகியோரின் பேரனும் காலம்சென்ற J D யோசவ், காலம்சென்ற ஞானம்பா காலம்சென்ற ஆசீர்வாதம், மத்தியாஸ், மோசஸ், அருட்திரு. டிறாஞேடனியல் ( O S B] டேவிட் [அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனருமாவர் அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை [8 - 5 - 83] காலை 9 மணிக்கு மல்லாகம் கத்தோலிக்க மேல்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்

குடும்பத்தினர்

சீல இல்லம், மல்லாகம். 7145


# I. A. A. Part - 1

(அடிப்படைத் தகுதி O/L சித்தி)

## CHARTERED Preliminary Licentiate Course

யாழ்-கொழும்பு பிரபல விரிவுரையாளர்களின் இணைந்த போதனை

யாழ். நகரில் மிகக்குறைந்த கட்டணம். மாணவர் வசதிக்கேற்ப கட்டணவசதி 10 மாணவர்வீதம் புலமைப் பரிசில்கள் அடிப்படை ஆங்கில அறிவு மட்டுமே பரீட்சை. பரீட்சை 23-5-83 (முன்கூட்டியே அனுமதி பெறுபவர்கள் மட்டுமே பரீட்சைக்கு தோற்றலாம்.)

ஆரம்பம்:- 28-5-83

விபரங்கட்கு

**Darmananda Institutes**

250, Stanley Road Jaffna

(ஸ்ரீதர் சினிமா முன்பாக) (N. M. W. Building)

Tele. 24011

# SPOKEN ENGLISH COURSE

- துரித 5 மாத காலப் பயிற்சி
- மிகக் குறைந்த கட்டணம்
- இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்

யாழ். பிரபல ஆசிரியர்
K S. N. CUMARAN

ஆரம்பம்: 14-5-83 மாலை 3.00

விபரங்களுக்கு:

**Darmananda Institutes**

250, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

தொலைபேசி 24011

# O/L Dec. 83

## ENGLISH wtih GRAMMAR

(விசேட திறமைச்சித்திகட்கு உத்தரவாதம்)

★ சிறந்த முறையிலான போதனை
★ இலவச வினாவிடை, விளக்கக்குறிப்புகள்
★ மிகக் குறைந்த கட்டணம்

யாழ் பிரபல ஆசிரியர்
K S N CUMARAN

ஆரம்பம்: 10 - 5 - 83 மாலை 4-00

விபரங்கட்கு

**Darmananda InstituteS**

250, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஸ்ரீதர் சினிமா முன்பாக) Tele: 24011

# உங்கள் பண முதலீட்டிற்கு

**36%** அதீத வட்டி வழங்கும்

# தமிழர் நிதியம்

நிதி நிறுவனத்தினர்
(Thamil Funds & Finance Ltd.)
வழங்கும்

மாதம் ரூபா 10/- சேமித்து தொடர்ந்து 24 மாதங்கள் சேமித்தால் ரூபா 250/- பணம் கிடைக்கும். அத்துடன் மாதாமாதம் நடைபெறும் அதிர்ஷ்ட லாபத்தில் அதிர்ஷ்டம் கிடைத்தால் ரூபா 250/- மொத்தமாக பெறுவீர்கள். தொடர்ந்து மிகுதிப் பணம் செலுத்தவும் வேண்டியதில்லை.

● ● ●

உங்கள் சேமிப்பை ஊக்கும் நோக்குடன் எமது நிறுவன பிரதிநிதிகள் இன்று 7-5-83 உங்களை நாடும்போது தங்கச்சுரங்கம் அதீத முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு உறுப்பினராக சேருங்கள்.

## தமிழர் நிதியம்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 22437

7058


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மே மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmder B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.